# துரியோதனனுக்கும் ஒரு ஆலயம்

## சாந்திப்பிரியா

*(ஓம் சரவணபவர், அக்டோபர், 2008 இதழில் வெளியான இந்த கட்டுரையின் விரிவாக்கப்பட்ட மறு பதிப்பு இது )*



*துரியோதனன்*

*நன்றி: http://en.wikipedia.org/wiki/File:Kondadakuli.jpg*

மகாபாரத நாயகன் துரியோதனுனுக்கு ஒரு கோவிலா ? நம்ப முடிகின்றதா ? முடியவில்லை எனில் கொல்லத்தில் உள்ள மலநாடு என்ற ஊருக்குச் செல்லுங்கள். சாஸ்தம்கோட்டரா என்ற இடத்தில் இருந்து 14 கிலோ தொலைவிலும், ஆலம்கடவு என்ற ஊரில் இருந்து 27 கிலோ தொலைவிலும் உள்ளது மலநாடு. அங்குதான் துரியோதனன் மற்றும், துரோணர், கர்ணண், சகுனி, மற்றும் பீஷ்மரும் பூஜிக்கப்படுகின்றனர். தெய்வச் சிலையே இல்லாமல் இருக்கும் அந்த ஆலயத்தில் இவர்கள் அனைவரும் தெய்வமாக போற்றி வணங்கப்பட்டாலும் அந்த ஆலயம் துரியோதனன் ஆலயம் என்ற பெயரே பெற்றுள்ளதின் காரணம் துரியோதனன்தான் அந்த ஆலயத்தின் மூல தெய்வம். அவருக்கும் பக்தர்கள் இருக்கின்றனர்.

அந்த ஆலயத்தின் பெயர் மலையப்பூப்பன்னன் ஆலயம். அந்த கிராமத்தில் வசிக்கும் பலருக்கும் அவர்கள் பெயரில் துரியோதனன் என்ற அடைமொழிப் பெயர் உள்ளது. உள்ளுரைச் சேர்ந்த

ஊராளியான குருவர் என்ற இனத்தவரே அந்த ஆலயத்தின் பிரதான பூஜாரியாக உள்ளார். அந்த ஆலயத்தை நிர்வாகிப்பது நாயர், குருவர் மற்றும் இசவா என்ற இனப்பிரிவை சேர்ந்த மக்கள்தான். மகாபாரதம் நடந்த காலத்தில் வனப் பிரதேசமாக இருந்த அந்த இடத்தில் பாண்டவர்களைத் தேடி வந்த துரியோதனன் களப்படைந்தான். அப்பொழுது அவன் யார் என்பது சரி வரத் தெரியாததினால் அவனுக்கு தண்ணீரும் உணவும் தந்து உபசரித்தது குருவர் வம்சத்தைச் சேர்ந்த மக்களாம்.

துரியோதனனுக்கு கள் மற்றும் சாராயம் போன்றவை மிகவும் பிடிக்கும் என்பதினால் பண்டிகை தினத்தில் குடுவையில் கள் மற்றும் சாராயம் ஏந்தி வந்து அதை பிரசாதமாக அளித்தனர். கள் மற்றும் சாரயத்தை பிரசாதமாகப் படைத்தப் பின் மீதி உள்ளதை அவர்கள் பிரசாதமாக பருகி விடுவார்களாம். இப்படி ஒரு பழக்கம் உஜ்ஜயினியில் உள்ள காலபைரவர் என்ற ஆலயத்திலும் உள்ளது. ஆகவே இந்த பழக்கத்தைப் புதியது எனக் கூற முடியாது. கள் மற்றும் சாரயத்தை கொண்டு வர இயலாதவர்கள் கோழி, சிவப்பு பட்டுத் துணி அல்லது வெற்றிலைப் பாக்கைக் கொண்டு வந்து பூஜித்தனராம். முன்பு அந்த ஆலயத்தில் பலி கொடுக்கும் பழக்கமும் இருந்தது. ஆனால் நாளடைவில் பலரும் அதற்கு எதிர்ப்பு தெரிவித்ததினால் அந்தப் பழக்கம் நின்று விட்டது. அது போல பலியிடும் பழக்கமும் நின்று விட்டதாம். இவற்றைத் தவிற உள்ளுரில் விளையும் தானியம், மற்றும் பிற உணவு வகைகளும் பிரசாதமாகப் படைக்கப்படுகின்றன.

மலயாளத்தில் மீன மாதத்தில்- மார்ச் மற்றும் ஏப்ரல் மாத இடையே வரும் இரண்டாவது வெள்ளிக் கிழமையில் அந்த ஆலயத்தில் நடக்கும் மலக்குடா விழாவில் ஆயிரக்கணக்கானவர்கள் வந்து பங்கேற்று வணங்குகின்றனர். முதலில் திராவிடர்களுடைய கலாசாரத்தில் இருந்து வந்த இந்த சிலையற்ற ஆலயத்தில் நாளடைவில் பஸ்மம் , அப்பம் போன்ற பிரசாதங்களும் தரப்படத் துவங்கியதற்கு எதிர்ப்பு வந்துள்ளது.